பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

03 02 2023 **FRIDAY** 7 15 **AM**

வணக்கம். ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. அஸ்ஸாம் மாநிலம் பார்பேட்டாவில் இன்று நடைபெறும் உலக அமைதிக்கான கிருஷ்ணகுரு ஏக்நாம் அகண்ட கீர்த்தனை நிகழ்ச்சியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி காணொலி வாயிலாக பங்கேற்று உரையாற்றுகிறார்.

2. விண்வெளிச் சுற்றுலாவை ஊக்குவிப்பது குறித்து அரசு பரிசீலித்து வருவதாக மத்திய விண்வெளித்துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

3. ஹஜ் புனித யாத்திரைக்காக ஒரு லட்சத்து 75 ஆயிரம் பேருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திருமதி ஸ்மிருதி இரானி கூறியுள்ளார்.

4. தெலங்கானா சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத்தொடர் அம்மாநில ஆளுநர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் உரையுடன் இன்று தொடங்குகிறது.

5. ஈரான் சர்வதேச பேட்மின்டன் போட்டியின், காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில், இந்தியாவின் **Tasmin Mir**. இன்று இந்தோனேஷியாவின் **Mutiara Ayu Puspitaravi**-யை எதிர்கொள்கிறார்.

>>>><<<<

அஸ்ஸாம் மாநிலம் பார்பேட்டாவில் இன்று நடைபெறும் உலக அமைதிக்கான கிருஷ்ணகுரு ஏக்நாம் அகண்ட கீர்த்தனை நிகழ்ச்சியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி காணொலி வாயிலாக பங்கேற்று உரையாற்றுகிறார்.

ஒருமாத காலம் நடைபெறவுள்ள இந்நிகழ்ச்சியில், உலகம் முழுவதிலுமிருந்து ஒன்றரை கோடி பக்தர்கள் பங்கேற்கவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

கல்வி, சுகாதாரம் மற்றும் ஆன்மீகம் உள்ளிட்ட துறைகளில் இந்த சேவாஸ்ரம் சேவையாற்றி வருவதாக மேலும் கூறுகிறார்.

>>>><<<<

பொது சேவை மையங்களில் வழங்கப்படும் சேவைகளை தொடக்க வேளாண் கடன் சங்கங்கள் வழங்குவதற்கு வகை செய்யும் ஒப்பந்தம் நேற்று புதுதில்லியில் கையெழுத்தானது.

இந்த ஒப்பந்தத்தில் கூட்டுறவுத்துறையும், தகவல் தொழில்நுட்பத்துறையும் கையெழுத்திட்டதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

கூட்டுறவு அமைப்புகளை வலுப்படுத்துவதற்கும், விவசாயிகள் பல்வேறு சேவைகளை எளிதாக பெறுவதற்கும் இந்த ஒப்பந்தம் உதவிடும் என்று மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

ஊரகப்பகுதிகளில் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களின் பணிகள் இன்றியமையாததாக உள்ளது என்றும் அவர் கூறினார்.

தற்போது இந்த ஒப்பந்தத்தின் மூலம், கூடுதல் வேலைவாய்ப்புகள் உருவாகும் என்றும் திரு அமித் ஷா தெரிவித்தார்.

>>>><<<<

மாநிலங்களுக்கு வழங்கப்படும் 50 ஆண்டுகால வட்டியில்லா கடன் மேலும் ஓராண்டுக்கு நீட்டிக்கப்படும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இந்திய தொழில் கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய அவர், உள்கட்டமைப்பு முதலீடுகள் மற்றும் நலத் திட்டங்களை தொடர்ந்து மாநில அரசுகள் மேற்கொள்ளும் வகையில், மத்திய அரசு இந்த முடிவை மேற்கொண்டுள்ளதாக கூறினார்.

இதற்கென ஒரு லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இதில் 80 சதவீத நிதி, மாநிலங்களின் முதலீட்டுத் தேவைகளுக்கு பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் எஞ்சியுள்ள 20 சதவீத நிதியை ஒரே நாடு – ஒரே ரேஷன் அட்டை திட்டம் போன்ற நலத்திட்டங்களுக்கு பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் அமைச்சர் கூறினார்.

>>>><<<<

விண்வெளிச் சுற்றுலாவை ஊக்குவிக்கும் வகையில், உள்நாட்டு விண்வெளித் திறனை மேம்படுத்துவது குறித்து அரசு பரிசீலித்து வருவதாக மத்திய விண்வெளித்துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலம் அவர் அளித்துள்ள பதிலில், விண்வெளி சுற்றுலாவிற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆய்வு நடத்தப்பட்டு வருவதாக தெரிவிள்ளார்.

மனிதனை விண்வெளிக்கு அனுப்பும் ககன்யான் திட்டம் உள்ளிட்ட பல்வேறு தொழில்நுட்ப மேம்பாட்டு நடவடிக்கைகளில், இஸ்ரோ ஈடுபட்டுள்ளதாக அமைச்சர் கூறியுள்ளார்.

>>>><<<<

ஹஜ் புனித யாத்திரை மேற்கொள்வதற்காக இந்தியாவிலிருந்து செல்வோருக்கான ஒதுக்கீடு ஒரு லட்சத்து 75 ஆயிரத்து 25-ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திருமதி ஸ்மிருதி இரானி கூறியுள்ளார்.

நேற்று மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், சவுதி அரேபியாவுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி, பழைய ஒதுக்கீடே தற்போது மீண்டும் செயல்பாட்டுக்கு வந்துள்ளதாக குறிப்பிட்டார்.

>>>><<<<

வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு முரளிதரன் இரண்டு நாள் அரசு முறைப்பயணமாக இன்று இலங்கை செல்கிறார்.

இலங்கையின் சுதந்திர தின கொண்டாட்டத்தில் அவர் பங்கேற்கவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அந்நாட்டு அதிபர் மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சருடனும் திரு முரளிதரன் விரிவாக பேச்சு நடத்த திட்டமிட்டுள்ளார்.

>>>><<<<

விமான நிலையங்களில் முக அடையாள தொழில்நுட்பத்தின் மூலம், விமானப் பயணிகளை அனுமதிப்பதற்கான பயோமெட்ரிக் நடைமுறைகளை அமல்படுத்துவது குறித்து மத்திய அரசு பரிசீலித்து வருகிறது.

இதுதொடர்பாக சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த டிஜி யாத்ரா கொள்கை, கொல்கத்தா, பூனே, விஜயவாடா மற்றும் ஹைதராபாத் விமான நிலையங்களில் அமல்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதிலும் உள்ள பிற விமான நிலையங்களுக்கு இத்திட்டம் படிப்படியாக நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அந்த அமைச்சகம் மேலும் கூறியுள்ளது.

முதல்கட்டமாக தில்லி, பெங்களூரு மற்றும் வாரணாசி விமான நிலையங்களில் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் இது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த பயோமெட்ரிக் முறை, விமானப் பயணிகள் தடையின்றி பயணம் மேற்கொள்வதற்கான அனுபவத்தை அளிக்கும் என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது.

>>>><<<<

நுகர்வோருக்கு, கிலோ ஒன்றுக்கு 29 ரூபாய் 50 காசு என்ற விலையில் கோதுமை மாவை விற்பனை செய்ய மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

அரசின் பல்வேறு விற்பனை நிலையங்கள் மூலம், வரும் 6ஆம் தேதி முதல் கோதுவை மாவு விற்பனை செய்யப்படும் என்று மத்திய உணவு மற்றும் பொதுவழங்கல் துறை தெரிவித்துள்ளது.

உணவுப் பொருளாதாரத்தில் பணவீக்க விகிதத்தை கட்டுப்படுத்தும் வகையில், தேசிய வேளாண் கூட்டுறவு சந்தை கூட்டமைப்பு, தேசிய கூட்டுறவு நுகர்வோர் கூட்டமைப்பு மற்றும் கேந்திரிய பந்தர் போன்றவற்றின் விற்பனை நிலையங்கள் மூலம் கோதுமை மாவு விற்பனை செய்யப்படும்.

இதற்கென 3 லட்சம் மெட்ரிக் டன் கோதுமை மாவு, இருப்பில் வைக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகளின் பரிந்துரையின்படி, கூட்டுறவு சங்கங்கள், சுயஉதவி குழுக்கள் ஆகியவற்றுக்கு கிலோ ஒன்றுக்கு 23 ரூபாய் 50 காசு-க்கு விற்பனை செய்யப்படும் என்றும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

>>>><<<<

தெலங்கானா சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத்தொடர் ஆளுநர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் உரையுடன் இன்று தொடங்குகிறது.

ஆளுநர் உரை முடிந்தவுடன் பேரவைத் தலைவர் தலைமையில் அலுவல் ஆய்வுக்குழு கூடி, இக்கூட்டத்தொடரை எத்தனை நாட்களுக்கு நடத்துவது என்பதை இறுதி செய்ய உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மாநில அரசின் நிதிநிலை அறிக்கை அடுத்த வாரம் தாக்கல் செய்யப்படக்கூடும் என்றும் அவர் மேலும் கூறுகிறார்.

சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் தொடங்கவுள்ளதையடுத்து, அவ்வளாகத்தை சுற்றியுள்ள பகுதிகளில் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

>>>><<<<

ஹரியானா சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத்தொடர், வரும் 20-ஆம் தேதி தொடங்கவுள்ளது.

நேற்று செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த அம்மாநில முதலமைச்சர் திரு மனோகர்லால் கட்டார், இரண்டு கட்டங்களாக இந்த கூட்டத்தொடரை நடத்த பேரவைத் தலைவரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

முதல்கட்ட பட்ஜெட் கூட்டத்தொடரில் ஆளுநர் உரையும், நிதி நிலை அறிக்கையும் தாக்கல் செய்யப்படும் என்று அவர் தெரிவித்தார்.

இரண்டாம் கட்ட கூட்டத்தொடரில் நிதிநிலை அறிக்கை மீதான விவாதம் நடைபெற்று நிறைவேற்றப்படும் என்றும் முதலமைச்சர் கூறினார்.

>>>><<<<

பிரதமர் திரு நரேந்திர மோடியின் நடவடிக்கைகள் காரணமாக சர்வதேச அரங்கில் இந்தியாவின் நன்மதிப்பு மேலும் அதிகரித்துள்ளதாக உத்தராகண்ட் முதலமைச்சர் திரு புஷ்கர் சிங் தமி கூறியுள்ளார்.

நேற்று டேராடூனில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மத்திய பட்ஜெட் வலிமையான இந்தியாவை உருவாக்குவதற்கான அடித்தளமாக திகழ்கிறது என்று குறிப்பிட்டார்.

உத்தராகண்ட் வளர்ச்சிக்கான பல்வேறு திட்டங்கள் இதில் இடம் பெற்றிருப்பதாகவும் அவர் கூறினார்.

உத்தராகண்டிற்கு புதிதாக நான்கு செவிலியர் பயிற்சி கல்லூரிகள் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

உத்தராகண்ட் வளர்ச்சிக்காக மத்திய பட்ஜெட்டில் இடம்பெற்றுள்ள திட்டங்களையும் திரு புஷ்கர் சிங் தமி விரிவாக எடுத்துரைத்தார்.

>>>><<<<

உலக அளவில் பொருளாதாரத்தில் இந்தியாவை முதலிடத்திற்கு கொண்டுவரும் நோக்கில் மத்திய பட்ஜெட் தயாரிக்கப்பட்டுள்ளதாக அஸ்ஸாம் முதலமைச்சர் திரு ஹிமந்த பிஸ்வா சர்மா கூறியுள்ளார்.

செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்துள்ள அவர், அனைத்து தரப்பு மக்களின் எதிர்பார்ப்புகளையும் பூர்த்தி செய்யும் வகையில் இந்த பட்ஜெட் அமைந்துள்ளதாக கூறினார்.

வடகிழக்கு மாநிலங்களுக்கு கூடுதல் நிதி பகிர்வு அளிக்க இந்த பட்ஜெட்டில் வகை செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன்மூலம், அஸ்ஸாம் மாநிலத்திற்கு கூடுதலாக 10 ஆயிரம் கோடி ரூபாய் கிடைக்கும் என்றும் திரு ஹிமந்த பிஸ்வா சர்மா கூறினார்.

>>>><<<<

மகாராஷ்ட்ராவில் தீவிரவாத எதிர்ப்பு படையினர், பாப்புலர் பிராண்ட் ஆஃப் இந்தியா அமைப்பை சேர்ந்த ஐந்து பேருக்கு எதிராக மும்பை அமர்வு நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்துள்ளனர்.

தேச விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக கூறி, இந்த அமைப்பை சேர்ந்த 21 பேரை, இப்படையினர் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் கைது செய்தனர்.

இதுதொடர்பாக, அவர்களது இல்லங்களில் சோதனைகளும் நடத்தப்பட்டன.

இதுதொடர்பாக, நான்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதாக, தீவிரவாதி எதிர்ப்பு படையினர் கூறினர்.

>>>><<<<

குமரிக்கடல் மற்றும் அதனையொட்டியுள்ள பகுதிகளில் நிலை கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக இன்று தென்தமிழக மாவட்டங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக, திருவாரூர் மாவட்டத்தில் பள்ளிகளுக்கும், தஞ்சை மாவட்டத்தில் பள்ளி – கல்லூரிகளுக்கும், நாகை மாவட்டத்தில் நடுநிலை பள்ளிகளுக்கும் இன்று விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால், மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

>>>><<<<

ஈரான் சர்வதேச பேட்மின்டன் போட்டியின், காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில், இந்தியாவின் **Tasmin Mir**. இன்று இந்தோனேஷியாவின் **Mutiara Ayu Puspitaravi**-யை எதிர்கொள்கிறார்.

மற்றொரு போட்டியில், இந்தியாவின் **Sreshta Reddy** - இந்தோனேஷியாவின் **Susando**-வை எதிர்கொள்கிறார்.

>>>><<<<

தாய்லாந்து மாஸ்டர்ஸ் பேட்மின்டன் போட்டியின், ஆடவர் காலிறதி ஆட்டத்தில் இந்தியாவின் சாய் ப்ரணீத் இன்று சீனாவின் **Li Shi Feng**-வை எதிர்கொள்கிறார்.

>>>><<<<

முத்தரப்பு மகளிர் டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டி இறுதியாட்டத்தில் தென்னாப்பிரிக்கா ஐந்து விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்று கோப்பையை கைப்பற்றியது.

>>>><<<<

டாக்காவில் இன்று நடைபெறவுள்ள 20 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் தெற்காசிய கால்பந்து சாம்பியன் போட்டியில், இந்தியா பூட்டானை எதிர்கொள்கிறது.

>>>><<<<